அனுப்புநர்,
பா. பொன்னையா,இ.ஆ.ப.,
ஆணையர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
சென்னை 15

பெறுநர்,
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்,
(சென்னை மாவட்டம் நீங்கலாக)

ந.க. எண்4870/2024/பரா MIS-1, நாள். 08.7.2025

அய்யா/அம்மையீர்,

பொருள்– கட்டிட அனுமதி – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் கட்டுமானங்கள் மீது நடவடிக்கை எடுத்தல்– தொடர்பாக

பார்வை –
1. நகர்ப்புற ஊராமைப்பு சட்டம்., பிரிவு 56 மற்றும் 57 மற்றும் விதி எண். 80 (A) மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட விதிகள் 2019
2. அரசாணை எண். (நிலை) 195 (வீடுகள் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி) , நாள். 5.11.2022
3. அரசாணை எண். 119 (ஊரக வளர்ச்சித்துறை மற்றும் ஊராட்சித்துறை) நாள். 16.7.2024

பார்வையில் காணும் அரசாணைகள் மீது தங்களின் கவனத்தினை கொணர விழைகிறேன்.

பார்வை (1) ல் கண்டுள்ள நகர் மற்றும் ஊரமைப்பு திட்டமிடல் சட்டம் 1971, விதிகள்படி ஊரகப்பகுதிகளில் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்படுகிறது. பார்வை 2–ல் கண்ட அரசாணையின்படி அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களின் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த வழிகாட்டி நெறிமுறைகள் விளக்கப்பட்டுள்ளன.

மேலும் பார்வை (3)– ல்., கண்ட அரசாணையின்படி தமிழ்நாடு அரசு ஒற்றைச் சாளர முறையில் இணையதளம் ஒன்றினை உருவாக்கி, அதில் கட்டிட அனுமதியை மூன்று வகைகளில் வழங்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி சுயசான்றின் அடிப்படையில், 2500 சதுர அடியிலிருந்து மனையில், 3000 சதுர அடி வரையிலான பரப்பளவுள்ள குடியிருப்புக் கட்டுமானங்களைக் கட்டிக்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது.

கட்டிடத்தின் பரப்பளவு 10,000 சதுர அடிக்கு கீழ் உள்ள பட்சத்தில் அதற்கு உள்ளாட்சி அமைப்புகளிடம், இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இக்கட்டிட வரைபடங்களின் ஆவணங்கள் உரிய அலுவலர்களால் ஆய்வு

மேற்கொள்ளப்பட்டு, கட்டிட வரைபட அனுமதி இணைய தளம் மூலம் வழங்கப்படுகிறது.

10,000 சதுர அடிக்கு மேற்பட்ட கட்டிடங்களுக்கு, தொழில் நுட்ப அனுமதி நகர் மற்றும் ஊரமைப்பு துறை மூலம் பெறப்பட்டு, இறுதி ஒப்புதல் கிராம ஊராட்சியின் நிர்வாக அலுவலரால் வழங்கப்படுகிறது.

இவ்வாறு கட்டிட வரைபட அனுமதி பெறப்பட்டு கட்டப்பட்ட கட்டிடங்கள் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடங்கள் என்றும், கட்டிட வரைபட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்கள் அங்கீகரிக்கப்படாத கட்டிடங்கள் என்றும் வரையறை செய்யப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட கட்டிடங்கள் என்பது முறையான ஆய்வுக்குபின் அனுமதி அளிக்கப்பட்ட கட்டிடங்கள் ஆகும். முறையான ஆய்வுக்கு உட்படாமல் கட்டிட வரைபட அனுமதியும் பெறாமல் கட்டப்படும் அங்கீகரிக்கப்படாத கட்டிடங்களின் கட்டுமானத்தை நிறுத்த, நகர் மற்றும் ஊரமைப்பு திட்டமிடல் சட்டம் 1971 விதிகள் 56, 57 மற்றும் 80 (A) –மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட மேம்பாட்டு விதிகள் 2019–யின்படி நடவடிக்கை மேற்கொள்ள கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. கிராம ஊராட்சிகளின் நிர்வாக அலுவலரின் அனுமதி இன்றி கட்டுமானப் பணிமேற்கொள்ளும் நபர்களிடம் இருந்து உரிய நிலம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் கட்டிட வரைபட அனுமதி சான்றினைகோரி அறிவிப்பினை வழங்க வேண்டும்.
2. அனுமதி இன்றி கட்டப்படும் கட்டுமானங்களை நேரடியாகக் கள ஆய்வு செய்ய வேண்டும். கள ஆய்வின் போது கட்டிடம் முழுமையாக கட்டப்பட்டுள்ளதா அல்லது கட்டுமான பணிமேற்கொள்ளப்பட்டுவருகிறதா? என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்.
3. கட்டிட வரைபட அனுமதி பெறப்பட்டுள்ளதா? என்றும், அதிலிருந்து விதிமுறைகளை மீறி கட்டுமானங்கள் அமைந்துள்ளதா? என்றும் ஆய்வு செய்து அதற்கான முழுவிவரத்தையும் ஆய்வறிக்கையில் குறிப்பிட வேண்டும்.
4. கட்டுமானம் முடிவு பெற்றிருப்பின் முடிவறிக்கை உரிய தொழில்நுட்ப அலுவலரிடம் பெறப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்.
5. மேலும் கட்டிடம் சொத்து வரி விதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதா அல்லது விடுபட்டுள்ளதா என்பதைக் குறிப்பிட வேண்டும்.
6. கட்டிடத்தில் குடிநீர் வசதி, மின்சார வசதி மற்றும் கழிவுநீர் வசதி ஆகிய வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? என்பதை ஆய்வு செய்து ஆய்வு அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.

7. அனுமதி பெறப்படாமல் கட்டப்பட்ட கட்டிடம் தொடர்ந்து கட்டப்பட்டு கொண்டிருந்தால் அதை பூட்டி முத்திரை இடும் அதிகாரம் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அலுவலருக்கு உண்டு. அதை படிவம் 3 – இல் சம்பந்தப்பட்ட நபருக்கு அறிவிப்பாக சார்வு செய்ய வேண்டும்.

8. கட்டிட வரைபட அனுமதி இன்றி கட்டப்படும் அங்கீகரிக்கப்படாத கட்டிடங்களின் உரிமையாளருக்கு அளிக்கப்படும் அறிவிப்பானது உரிய அலுவலர்களால் நேரடியாக சம்பந்தப்பட்ட நபருக்கு சார்பு செய்யப்பட வேண்டும். அவ்வாறு சார்வு செய்யப்படும் போது, அந்த நபர் இல்லை என்றால் அவரின் குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த நபரிடம் அந்த அறிவிப்பினைச் சார்பு செய்யலாம்.

9. இவ்விரண்டு நபர்களும் இல்லை என்றால் தற்போது அந்த நபர் வசிக்கும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் ஒப்புகை அட்டையையும் இணைத்து அனுப்பி சார்பு செய்யலாம். அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை மேற்கொள்ளும் நபர்கள் மீது வழங்கப்பட்ட அறிவிக்கையின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை பின்வருமாறு தெரிவிக்கலாம்.

1. ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவிக்கையுடன் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் விபரம் அறிவிக்கையின் நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றை இணைத்து கிராம ஊராட்சியின் நிர்வாக அலுவலருக்குஅளிக்கவேண்டும்.
2. அவ்வாறு உரிய ஆவணங்களுடன் வரப்பெறும் பதிலுறைக்கு உரிய ஒப்புகை சீட்டு கிராம ஊராட்சியின் செயலர்களால் வழங்கப்பட வேண்டும்.
3. இந்த ஆவணங்களை கிராம ஊராட்சியின் செயலர், உரிய தொழில்நுட்ப அலுவலர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
4. கிராம ஊராட்சியின் நிர்வாக அலுவலர், தொழில் நுட்ப அலுவலர் இக்கட்டிடங்களின் ஆய்வறிக்கைக்குத் தனியான பதிவேடு பராமரிக்க வேண்டும் இந்த பதிவேட்டில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை ஆய்வு செய்யும் அலுவலர் தனது குறிப்புரையினை பதிவு செய்து அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரத்தையும் பதிவு செய்ய வேண்டும்.

உரிய அறிவிக்கையின்படி கட்டுமானப்பணிகள் நிறுத்தப்படவில்லை எனில், அக்கட்டிடத்தினை பூட்டி சீல் வைக்கவும் உரிய அலுவலர்கள் மற்றும் ஊராட்சியின் நிர்வாக அலுவலர், ஊராட்சியின் ஆய்வாளரிடம் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இணைப்பு– படிவங்கள்

ஒம்/– பா.பொன்னையா,
ஆணையர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

ஆணையருக்காக

நகல்–

உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
அனைத்து மாவட்டங்கள். (உரிய நடவடிக்கைகாக)

**FORM-I**

**NOTICE FOR PRODUCTION OF DOCUMENTS**

Notice No. Date:

On the basis of information which has come to notice that the development/premises………………..(Name)at…………………,Village,………………………………Bl ock,………..district has been made or is being developed, without obtaining due planning permission or in deviation of the Building plan permission granted.

You are hereby requested to produce the following documents. within ............ days from the date of receipt of this notice, failing which necessary action will be initiated under section 56 or 57 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972),based on the records *I* documents available at our end.

1.
2.
3.
4.

[Specify the documents required]

**xxxxxx**

Signature of the issuing authority

Date: ..........
Seal: ...,.......

To.
The Owner and/or Developer

# <u>FORM II</u>

## <u>NOTICE OF INSPECTION</u>

Notice No. Date:

Sub: Development [carried out *I* being carried out] …………….. (Name) ..........village, ..........taluk, ………………..district.

Take notice that the building/land situated ate ,...........Village,...........Block, ........... district will be inspected on..........[Date not less than seven days from the date of Notice shall be specified)] between the hours of[Time].

Please ensure to make yourself or your authorised representative present with all the necessary documents to carry out the inspection. [*Strike out whichever is not applicable]

**xxxxxx**
Signature of the issuing authority
Date: ..........
Seal: ...........

To,

The Owner and/or Developer and/or occupier

## FORM III

## NOTICE FOR THE REMOVAL OF UNAUTHORISED DEVELOPMENTCARRIED OUT WITHOUT PLANNING PERMISSION.

Notice No. Date:

Subject: Unauthorised Development at ,...........village, ...........taluk, district – Notice under section 56(1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972) of the Planning(requiring production of- Issued - Reg.

Reference:
1. Notice No ………… of the Planning Authority, dated …………………. documents).
2. Site inspection made on ___

******

Pursuant to the inspection carried out on ,it is found that an unauthorized development of [land/building] has been carried out in the premises at ............., ...........village, ..........Block,…………. District.

without permission/after the permission for development of land or building has been duly revoked. The photographs of the development taken during the site inspection are enclosed.

You are hereby required to restore the [land/building] to its condition before the said development took place by [demolishing/altering the building or works or carrying out on land, of any building or other operations, ............................. (narrate the alteration required)] within ..........days from the date of receipt of this notice.

If the land or building has not been restored within the above period, appropriate action will be taken under sub-section (5) of section 56 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972), for demolition or alteration of any building or works or carrying out of any building or other operations as it may consider necessary, without any further notice. The cost incurred for demolition or alteration will be recovered from you.

[You are also requested to discontinue the use of the [land/building] within ........ days from the date of receipt of this notice.

If the owner or occupier has not discontinued the use of land or building within the specified period, appropriate action under sub-section (2-A) of section 56 of the said Act will be initiated by locking and sealing of the subject premises.

[strike out whichever is not applicable]
[not less than 30 days to be specified]

**xxxxxx**
Signature of the issuing authority
Date: ..........
Seal: ...........

To,

The Owner and/or Developer and/or occupier

To

**FORMIV**

**NOTICE FOR COMPLIANCE OF PLANNING PERMISSION**

**INRESPECT OF UNAUTHORISED DEVELOPMENT CARRIED**

**OUT INCONTRAVENTION OF PLANNING PERMISSION**

Notice No.Date :

Sub: Unauthorised Development at……………… ,........... village, ..........Block, ........... district - Notice under section 56(1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)- Issued - Reg

Ref: 1. Notice No …………….. of the Planning Authority, dated (requiring production of documents).
2. Site inspection made on

Pursuant to the inspection carried out on, it is found that an unauthorized development of [land/building] * has been carried out in the premises at ............., ..........village, ...........Block, ........... district in contravention of [any permission granted or any condition subject to which permission has been granted/in contravention of any permission which has been duly modified] *. The following deviations from the planning permission are found, namely:

1.

2.

The photographs of the development taken during the site inspection are enclosed.

You are hereby required to secure compliance with the [permission/with the conditions of the permission]* by [demolishing/altering the building or works or carrying out on land the works of...................(narrate the alteration required)/by carrying out on land of any building or other operations] *(narrate the work to be carried out) within ......... days# from the date of receipt of this notice.

If the compliance of the permission has not been secured within the specified period, appropriate action will be taken under sub-section(5) of section 56 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972),for demolition or alteration of any building or works or carrying out of any building or other operations as it may consider necessary, without any further notice.

[You are also requested to discontinue the use of the [land/building]* within ....... days# from the date of receipt of this notice.If the owner or occupier has not discontinued the use of land or building within the specified period, appropriate

action under sub-section (2-A) of section 56 of the said Act will be initiated by locking and sealing of the subject premises.]*

[*strike out whichever is not applicable]

[* not less than 30 days to be specified]

**xxxxxx**
Signature of the issuing authority
Date: ..........
Seal: ...........

To

Name and address of the owner/ occupier

## படிவம் – I

## ஆவணங்களை சமர்ப்பிக்க அறிவிப்பு

அறிவிப்பு எண்: .........................
தேதி: ........................

தகவலின் அடிப்படையில், கீழ்க்காணும் விவரங்கள் எங்களது கவனத்திற்கு வந்துள்ளன. அதாவது, ……………………..(பெயர்) என்பவரின் ……………………… கிராமம், ............ ........... ................. ஒன்றியம்,………….. ............ ........... மாவட்டத்தில் ..................................இடத்தில் உள்ள கட்டிடங்கள் திட்ட அனுமதி பெறாமல் அல்லது அனுமதிக்கப்பட்ட கட்டடத் திட்டத்துக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டுள்ளது அல்லது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, கட்டிட வரைபட அனுமதி தொடர்பான, ஆவணங்களை, இவ்வறிவிப்பை பெற்ற நாளிலிருந்து ............ நாட்களுக்குள் வழங்குமாறு கோருகிறோம். இவ்வகையில் ஆவணங்கள் வழங்கப்படத் தவறினால், **தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு திட்டச் சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35/1972)** ன் பிரிவு 56 அல்லது 57ன் கீழ் தேவையான சட்ட நடவடிக்கைகள் எங்களிடம் உள்ள பதிவுகள் /ஆவணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
[தேவையான ஆவணங்களை குறிப்பிடவும்]

அறிவிப்பை வழங்கும்
அலுவலர் கையொப்பம்
தேதி :
முத்திரை :

பெறுநர்
உரிமையாளர் மற்றும் /அல்லது மேம்படுத்துபவர்

<u>படிவம் – II</u>

<u>ஆவணங்களை சமர்ப்பிக்க அறிவிப்பு</u>

அறிவிப்பு எண்: ........................

தேதி: .......................

பொருள்: கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. / கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. – …………….. (பெயர்), ................ . ............ .....கிராமம், ......................... ஒன்றியம்., ……………….. மாவட்டம்

.......... கிராமம், .......... ஒன்றியம் , ………............ மாவட்டத்தில் அமைந்துள்ள கட்டிடம்/ அமைவிடம் ......... (தேதி) அன்று ஆய்வு செய்யப்படும். (இந்தத் தேதியானது, அறிவிப்பு வழங்கும் நாளிலிருந்து குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்குப் பிறகு இருக்க வேண்டும்). [நேரத்தை குறிப்பிடவும்] மணிக்குக்குள் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

ஆய்வினைச் செய்ய தேவையான அனைத்து ஆவணங்களுடன், தாங்கள் அல்லது தங்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி கட்டாயமாக அவ்விடத்தில் இருக்க வேண்டும். [பொருந்தாத உரையை குறித்தெடுக்கவும் / எடுத்து விடவும்]

அறிவிப்பை வழங்கும்
அலுவலர்கையொப்பம்
தேதி :
முத்திரை :

பெறுநர்
உரிமையாளர் மற்றும்/அல்லது மேம்படுத்துபவர்

படிவம் – III

<u>திட்ட அனுமதி பெறாமல் மேற்கொள்ளப்பட்ட விதிமீறல்</u>
<u>கட்டுமானத்தை அகற்றுவதற்கான அறிவிப்பு</u>

அறிவிப்பு எண்: ........................
தேதி: ........................

பொருள்: ........... கிராமம், ...........ஒன்றியம், ............ மாவட்டத்தில் சட்டவிரோத மேம்பாடு – தமிழ்நாடு நகர மற்றும் ஊரக திட்டமிடல் சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35/1972)பிரிவு 56(1)–ன் கீழ் அறிவிப்பு – வெளியீடு – தொடர்பாக

பார்வை –
1. திட்ட அனுமதி வழங்க அதிகாரம் பெற்ற அலுவலரின் அறிவிப்பு எண் ………… நாள் ………………….
2. ,,,,,,,,,,,,,,,,,,,,,,,, நாள் அன்று மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு ஆய்வு

*********

பார்வை (2) – இல் கண்டுள்ள ஆய்வறிக்கையின் படி, ,,,,,,,,,.......... **கிராமம்,** ...................... **ஒன்றியம்,** .......................... **மாவட்டத்தில்** அமைந்துள்ள கட்டிடத்தில்/நிலத்தில் திட்ட அனுமதி பெறாமல் அல்லது வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்பட்ட பின்னரும் விதிமீறல் [நிலம்/கட்டிடம்] மேம்படுத்தப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

எனவே, மேற்கண்ட மேம்பாட்டு செயல்களுக்கு முன் இருந்த நிலைக்கு மீண்டும் கொண்டு வர, [கட்டிடம் அல்லது பணிகளை இடித்து/மாற்றம் செய்து அல்லது பிற நடவடிக்கைகள் மேற்கொண்டு ................................................ (தேவையான மாற்றங்களை விவரிக்கவும்), இவ்வறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து .......... நாட்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட காலத்திற்குள் நிலம்/கட்டிடம் பழைய நிலையில் மீட்டெடுக்கப்படாவிட்டால், பிரிவு 56(5) ன் கீழ் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காகமேலும் எந்தவொரு அறிவிப்பும் வழங்கப்படாது. இடிப்பு அல்லது மாற்றத்திற்கு ஏற்பட்ட செலவுகள் தங்களிடம் இருந்து வசூலிக்கப்படும்.

மேலும், [தாங்கள் குறிப்பிட்ட [நிலம்/கட்டிடம்]பயன்படுத்துவதை ………. நாட்களில் நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. உரிமையாளர் அல்லது நேரடி பயன்பாட்டாளர் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் பயன்பாட்டில் வைத்திருப்பதை நிறுத்தவில்லை என்றால், பிரிவு 56(2–A)ன் கீழ் பொருந்தும் நடவடிக்கை எடுக்கப்படும். இதில் குறிப்பிட்ட வளாகம் பூட்டி சீல் வைக்கப்படும்.] *

[பொருந்தாததை குறித்தெடுக்கவும்]
[ குறைந்தது 30 நாட்கள் குறிப்பிடப்பட வேண்டும்]

அறிவிப்பை வழங்கும்
அலுவலர்
கையொப்பம்
தேதி :
முத்திரை :

**பெறுநர்:**
(உரிமையாளர்/பயன்படுத்துபவர் பெயர் மற்றும் முகவரி)

படிவம் – IV

<u>திட்ட அனுமதிக்கே எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோத மேம்பாட்டு நடவடிக்கைக்கான திட்ட அனுமதியைப் பின்பற்ற அறிவிப்பு</u>

அறிவிப்பு எண்: .........................
தேதி: ........................

பொருள்: ........... கிராமம், ........... ஒன்றியம், ........... மாவட்டத்தில் சட்ட விரோத மேம்பாடு – தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு திட்டச் சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35/1972) பிரிவு 56(1)ன் கீழ் மற்றும் – TNLBR 2019 அறிவிப்பு – வெளியீடு – தொடர்பாக

பார்வை – திட்டமிடல் ஆணையத்தின் அறிவிப்பு எண் …………….. நாள் ……………………. (ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய அறிவிப்பு) ............ அன்று மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு ஆய்வு

********

மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில், ........... கிராமம், ........... வட்டம், ........... மாவட்டத்தில் உள்ள வளாகத்தில் [தோட்டம்/கட்டிடம்] சார்ந்த சட்டதை மீறிய விதி மீறிய கட்டுமானங்கள் மேம்பாட்டுச் செயல்கள்*, வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கே எதிராக அல்லது திட்ட அனுமதியில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக அல்லது திருத்தப்பட்ட அனுமதிக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

திட்ட அனுமதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பின்வரும் மாற்றங்கள்/மீறல்கள் பதிவாகியுள்ளன:

1.

2.

கண்காணிப்பு நேரத்தில் எடுத்த புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

எனவே, தாங்கள் மேற்கொண்ட மேம்பாட்டு நடவடிக்கைகள் [அனுமதியுடன் / அனுமதியின் நிபந்தனைகளுடன்] அமைவதாக உறுதி செய்ய, [கட்டிடங்களை அல்லது பணிகளை இடிக்க அல்லது மாற்றிக்கட்ட அல்லது பின்வரும் பணிகளை மேற்கொள்ள................................. (தேவையான மாற்றங்களை விவரிக்கவும்)], இவ்வறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து .......... நாட்களுக்குள் (குறைந்தது 30 நாட்கள்) நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கூறிய கால எல்லைக்குள் திட்ட அனுமதி மீதான பின்பற்றல் உறுதி செய்யப்படாவிட்டால், பிரிவு 56(5)ன் கீழ் தேவையான கட்டிடங்கள், பணிகள், அல்லது பிற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், மேலும் எந்தவொரு அறிவிப்பும் வழங்கப்பட மாட்டாது.

[மேலும், [தோட்டம்/கட்டிடம்]–ன் பயன்பாட்டை இவ்வறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து .......... நாட்களுக்குள் நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட காலத்திற்குள்

நிலம் அல்லது கட்டிடத்தின் பயன்பாடு நிறுத்தப்படாவிட்டால், பிரிவு 56(2–A)ன் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்படும், அதில் வளாகம் பூட்டி சீல் வைக்கப்படும்.]

[பொருந்தாதவற்றை குறித்தெடுக்கவும்]
[குறைந்தது 30 நாட்கள் குறிப்பிடப்பட வேண்டும்]

அறிவிப்பை வழங்கும்
அலுவலர்கையொப்பம்
தேதி :
முத்திரை :

**பெறுநர்**:
(உரிமையாளர்/பயன்படுத்துபவர் பெயர் மற்றும் முகவரி)